வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu







மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு வெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 09.06.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 154 | பக்கங்கள் : 08


# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை திசை திருப்புவதற்கு தீவிர முயற்சி!

## கத்தோலிக்க திருச்சபை குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 09

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணைகளுக்கு பல்வேறு வழிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும், இந்த விசாரணைகளுக்கு தடைகள் ஏற்படும் என்ற பயமும் சந்தேகமும் எமக்கு உள்ளது. என கத்தோலிக்க திருச்சபை யின் ஊடகப் பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.


சுரேஷ் சலேயை விடுதலை செய்ய க்கோரி நடத்தப்படும் உண்ணா விரதப் போராட்டம் தொடர் பில். ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் கத்தோலிக்க திருச்சபை என்ற ரீதியில் எப்போதுமே இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த, அதேபோன்று காயமடைந்த மற்றும் இந்தத் தாக்குதல் காரணமாக பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகிய, பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக் காகவே குரல் கொடுத்து வருகிறோம்.

இந்தத் தாக்குதல் காரணமாக அப்பாவி மக்கள், உயிர்த்த

07



## செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து நேற்று 16 என்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன். 09

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் நேற்று 16 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியின் 3ஆம் கட்டத்தின் 19 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் யாழ். நிதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய அகழ்வில் புதிதாக 4 மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டதோடு 16 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன. அதனடிப்படையில் நேற்றுவரை மொத்தமாக 302

07

## நான்காவது நாளாகவும் தொடரும் சுகாதாரத் தொண்டர் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன். 09

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சுகாதாரத் தொண்டர்கள், தமக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு விடுக்கப்படவேண்டும் எனக் கோரி ஆரம்பித்த போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் இடம்பெற்றது.

நேற்றைய போராட்டத்தில் இரு அணிகளாக பிரிந்த சுகாதார தொண்டர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவும், கொழும்பு சுகாதார அமைச்சுக்கு முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்கள் வெற்றிடத்திற்கான நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு 92 பேருக்கு

07

## விடைபெறும் சுவிஸ் தூதுவர் வடக்கு ஆளுநரை சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஜூன். 09

இலங்கையிலிருந்து விடைபெற்றுச் செல்லும் சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை நேற்றைய தினம் திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, சுவிற்சர்லாந்து அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களுக்குக் ஆளுநர் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

மத்திய கிழக்குப் போர் காரணமாக

07

## கைதான பாடகரை விடுவிக்குமாறு வல்வெட்டித்துறையில் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன். 09

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இளம் பாடகர் சங்கீர்த்தனனின் விடுதலையை வலியுறுத்தி

07

## சாலேயின் உடல்நிலை மோசம் உயில் எழுதுவதற்கு அவர் தயார்!

### மனைவி மனோரி சாலே தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 09

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள போதும் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடும் தீர்மானத்தில் சாலே உறுதியாக உள்ளார். ஒரு துளி தண்ணீர் கூட அருந்தவில்லை. அவரது உடல் நிலை மோசமடைந்துள்ளதால் இரு கைகளிலும் சேலைன் ஏற்றப்பட்டுள்ளது. தனது கண்களை தானம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதோடு, இறுதி உயிலையும் எழுத தயாராகியுள்ளார் என சுரேஸ் சாலேயின் மனைவி மனோரி சலே தெரிவித்தார்.

நேற்று திங்கள்கிழமை

07

## உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 10 ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 09

2026ஆம் ஆண்டுக்குரிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என இலங்கை பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்திணைக்களம் விடுத்துள்ள

07

## எத்தியோப்பியாவில் கடத்தப்பட்ட யாழ்ப்பாண வாசிகள் மூவர் மீட்பு!

கொழும்பு, ஜூன். 09

எத்தியோப்பியாவில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலால் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த மூன்று இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் எத்தியோப்பிய அதிகாரிகள் இணைந்து நடத்திய நடவடிக்கையைத் தொடர்ந்து மூன்று இலங்கை நாட்டினரும் விடுவிக்கப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களை இலங்கைக்கு மீண்டும் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் தற்போது

07

## சொல்லிசைப் பாடகருக்கு பொதுமன்னிப்பு வேண்டும்!


### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 09

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள சங்கீத்ஷனைப் பொதுமன்னிப்பின் அடிப்படையிலோ அல்லது கருணை அடிப்படையிலோ ஜனாதிபதி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்” என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

07

## மகாஜனா பெண்கள் தேசிய சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன். 09

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 18 வயது பெண்கள்

07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

# ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விசாரணைகள் இறுதிக் கட்டத்தில்!

## பீதியடைந்து தடுமாறுகிறது ராஜபக்ஷ குடும்பம் வவுனியாவில் ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூன். 09

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்நிலையில் ராஜபக்ஷ குடும்பம் என்ன செய்வது என்று பீதியடைந்த நிலையில் தடுமாறுகின்றனர். எதிர்க்கட்சியினரும் அவர்களுக்கு உடந்தையாக மௌனிகளாக இருக்கின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஈஸ்டர் குண்டு தாக்குதலன் விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்தச் சூழ்நிலையில், ராஜபக்ஷ குடும்பத்தினர் பீதியடைந்த நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகின்றனர். அவர்கள் குறுக்கு வழியிலாவது தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சித்து வருகின்றனர்.

இதற்கும் மேலாக, ரஞ்சித் மத்தும பண்டார, ஞானசார தேரர் உட்பட பலரும் இணைந்து ஒன்றிணைந்து எதிர்க்கட்சியினர் என கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களால் எதுவுமே செய்ய முடியாது என்பது அவர்களுக்கே தெரியும். இருந்தாலும், மக்களிடையே ஒரு சினிமா பாணியிலான நடிப்பைக் காட்டுவதற்காகவே இத்தகைய செயல்பாடுகளைச் செய்கிறார்கள்.

குறிப்பாக தங்களுடைய அரசியல் நாடகத்தை அரங்கேற்றும் தற்காக மேற்கெள்ளப்பட்ட ஈஸ்டர் குண்டு தாக்குதல் மூலமாக நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகின. அத்தோடு இதன் விசாரணையானது நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டது. இந்த அநீதிக்கு நிச்சயமாக எங்களது அரசாங்கம் மற்றும் சட்ட ரீதியாக தீர்ப்பு வழங்க இருக்கின்றோம்.

அதேவேளையில், பீதியடைந்த இக்குழுவினர் குறித்த விசாரணையைக் குழப்பும் வகையில் பல்வேறுபட்ட முயற்சிகளைச் செய்து வருகின்றார்கள். நிச்சயமாக அவர்களது முயற்சிகள் பலனளிக்கப் போவதில்லை.

எதிர்க்கட்சியினருக்கு எழுப்பப்படும் கேள்விகள் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் மக்களுக்காக அரசாங்கத்தை அமைக்க முற்படுகிறீர்களா? அல்லது உங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக, உங்களுடைய கூட்டாளிகளையும், கடந்த காலங்களில் மக்களுக்கு எதிராக அநீதி இழைத்தவர்களையும் காப்பாற்றுவதற்காகக் கூடுகிறீர்களா? நிச்சயமாக மக்கள் அனைத்தையும் அறிவார்கள். உங்களுடைய போலி நாடகங்கள் எடுபடப் போவதில்லை. விரைவாக இந்த விசாரணைக்குரிய தீர்ப்புகள் வெளிவரும் போது, வெட்ட வெளிச்சமாக அனைத்துக் குற்றவாளிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களுக்குரிய தண்டனையை எங்களது அரசாங்கம் வழங்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை- என்றார். (அ)

# பொலனறுவையில் உரப் பிரச்சனை நெற்பயிர் அழிவடையும் அபாயம்!

கொழும்பு, ஜூன். 09

உரங்களைச் சரியான முறையில் பயன்படுத்த முடியாமை காரணமாக, தமது விவசாய நிலங்களிலுள்ள நெற்பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறி வருவதாகப் புலஸ்திகம பகுதி விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலனறுவை மாவட்டத்தின் லங்காபுர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அபயபுர மற்றும் புலஸ்திகம ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளே இந்தச் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு 17 முதல் 30 நாள்களாகியுள்ள நிலையில், அரசாங்கத்தினால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட உர மானியம் இதுவரை தமக்குச் சரியாகக் கிடைக்கவில்லை என விவசாயிகள் சுட்டிக் காட்டு கின்றனர்.

அரசாங்கத்தினால் 15,000 ரூபாவுக்குப் தனியார் துறையின ரிடம் கொள்வனவு செய்யப்ப டும் உரங்கள், தமக்கு 10,200 ரூபாவுக்கு வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், இதுவரை அந்த வாக்குறுதிகள் எதுவும் நிறை வேற்றப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஆங்காங்கே சுமார் 200 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவிலான நெற்பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கும் விவசாயிகள், இந்தத் துயர நிலைக்கு உடனடித் தீர்வை வழங்கி, தமக் குத் தேவையான உரத்தைப் பெற் றுக்கொள்வதற்கான வசதிகளை விரைவாக ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# 690 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, ஜூன். 09

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 690 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது மொத்தமாக 28,247 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட 28 பேர் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளின் அடிப்படையில் 284 பேரும், திறந்த பிடியாணைகளின் அடிப்படையில் 146 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 72 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 112 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனுடன், பல்வேறு போக்குவரத்து விதிமீறல்களுடன் தொடர்புடைய 4,437 பேருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

# யாழ்ப்பாணத்தில் இன்று முதல் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன். 09

யாழ். மாவட்டத்தில் டெங்கு நுளம்பு ஒழிப்பிற்கான விசேட வேலைத்திட்டம் இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை முன்னெடுக்கப் படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற டெங்குக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக யாழ்.மாவட்டத்தில் அதிக ஆபத்துள்ள கரவெட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கோப்பாய், சங்கானை, சாவகச்சேரி, நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இன்று தொடக்கம் 12ஆம் திகதிவரை விசேட டெங்கு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதன்படி இன்று பொது மக்களின் வீடுகள் மற்றும் சுற்றுச்சூழலிலும், நாளை மாவட்டத்தின் சகல அரச மற்றும் தனியார் அலுவலகங்களிலும், 11ஆம் திகதி பாடசாலை மற்றும் சகல கல்வி நிறுவனங்களிலும், 12ஆம் திகதி வர்த்தக நிலையங்கள், சந்தைகள், மதஸ்தலங்கள் மற்றும் பொது அமைப்புகள் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார். (அ)

# சாரதி அனுமதிப் பத்திரமின்றி பஸ்ஸை செலுத்தியவர் கைது!

கொழும்பு, ஜூன். 09

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் அதிக பயணிகளுடன் பஸ்ஸை பிரதான வீதியில் செலுத்திய வந்த சந்தேக நபர் ஒருவர் ஹற்றன் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளால் சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டார் என ஹற்றன் தலைமையகத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.ஆர்.ஏ.டி. சுகததாச தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் ஹற்றன் - டிக்கோயா சலங்கந்த பகுதியிலிருந்து தினமும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி பஸ்ஸை இயக்கி வந்துள்ளார் மேலும் இடைநடுவில் பஸ் சாரதியிடம் ஒப்படைக்கப்படும் என்ற தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டது என தலைமையகத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகர் மேலும் குறிப்பிட்டார்.

# அநுர, மைத்திரி ஆட்சிக் காலத்தின் சட்டவாக்க ஒப்பீட்டறிக்கை தவறு!

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 09

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோரின் முதலாம் கட்ட 18 மாத ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு, ஆய்வு நிறுவனம் ஒன்று வெளியிட்ட அறிக்கையின் துல்லியத்தன்மை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக சனிக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சி, குறித்த ஆய்வு அறிக்கை நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் தாக்கத்தையோ அல்லது அதன் முக்கியத்துவத்தையோ ஆராயாமல், வெறும் எண்ணிக் கையை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

மைத்ரிபால சிறிசேனவின் முதல் 18 மாத ஆட்சிக்காலத்தில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம் மற்றும் தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டம் உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க பல சட்டங்கள் இயற்றப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த சட்டங்கள் ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்தியதுடன், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தி, தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்து, பொதுமக்களுக்கான சுகாதார மற்றும் தகவல் அணுகுமுறையை உறுதிப்படுத்தியதாகவும் அந்த கட்சி தெரிவித்துள்ளது.

அதேபோன்று, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் 26 மாத காலப் பகுதியில், அரசியலமைப்பின்22ஆவது திருத்தம், பொருளாதார மாற்றுச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் உள்ளிட்ட 75 முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதையும் ஐக்கிய தேசியக் கட்சி நினைவு கூர்ந்துள்ளது.

மறுபுறம், முறையான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம், இதுவரை அத்தகைய தாக்கமேற்படுத்தக்கூடிய எந்தவொரு சட்டத்தையும் கொண்டுவர வில்லை என ஐக்கிய தேசியக் கட்சி விமர்சித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சில சலுகைகளை நீக்கும் சட்டங்களைத் தவிர, தற்போதைய அரசினால் குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் சாடியுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
07.06.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், வைகாசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சுரேஷ் சாலேயை மையப்படுத்தி அரங்கேறும் அரசியல் நாடகங்கள்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் அரச புலனாய்வு சேவையின் தலைவர் சுரேஷ் சாலேயின் கைதையும் தடுப்புக்காவலையும் தொடர்ந்து அரங்கேறும் அரசியல் நாடகங்கள் இலங்கை அரசியலில் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஒரு முக்கியமான முரண்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக அரசியல்வாதிகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறைகளுக்கும் நிறுவன ரீதியான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கும் இடையிலான முரண்பாடே அது.

தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சாலேயின் விவகாரத்தில் பல்வேறு அரசியல்வாதிகள் காட்டும் பிரதிபலிப்பு நீதிக்கான அக்கறையை விடவும் அவர்களின் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களையே வெளிப்படுத்துகின்றன.

சாலேக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் அவர்களின் ஸ்ரீலங்கா பொதுஜன மற்றும் அதனுடன் அணி சேர்ந்து நின்றவர்களாகவும் இருக்கிறார்கள். மக்கள் கிளர்ச்சியினால் தூக்கியெறியப்பட்ட ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த சரத் வீரசேகர, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சாலே நடத்தப்படும் விதம் குறித்து கடுமையான கவலையை வெளிப்படுத்தும் இவர்கள் சாலே மீதான விசாரணையையும் அதன் மூலமாக வெளிப்படும் விபரங்களையும் இராணுவப் புலனாய்வுக் கட்டமைப்பு மீதான தாக்குதலாகச் சித்தரிக்கிறார்கள். இது சிங்கள தேசியவாத வாக்காளர் தளத்தை திருப்திப்படுத்தும் இவர்களின் அரசியல் நலன்களுக்கு உகந்ததாகவும் அமைகிறது.

சாலே ஒரு "பலியாடு" என்று அவரது குடும்பத்தினர் கூறும் கருத்தை எதிரொலிப்பதன் மூலமாக இந்த அரசியல்வாதிகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினாலும் (சி.ஐ.டி.) சட்டமா அதிபர் திணைக்களத்தினாலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து கடந்த காலத்தில் ஆட்சியதிகாரத்தில் இருந்த முக்கியமான தலைவர்களை பாதுகாக்க முயற்சிக்கிறார்கள். பிள்ளையான் என்ற சிவனேசதுரை சந்திரகாந்தனுக்காகவும் கம்மன்பில போன்றவர்கள் பரிந்து பேசினார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து இந்த அரசியல்வாதிகள் இந்தளவுக்கு ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துவதில் மிகப்பெரிய ஒரு முரண்பாடு இருக்கிறது.

இவர்கள் உருவாக்கிய அல்லது வலுவாக ஆதரித்த அரசாங்கங்கள் உட்பட அடுத்தடுத்து பதவிக்கு வந்த ஆட்சிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தை அரச அதிகாரத்தின் தடையற்ற ஆயுதமாகப் பயன்படுத்தின. இந்த சட்டத்தின் கொடூரம் குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் எச்சரித்த வேளைகளில் எல்லாம் இவர்கள் அதை அலட்சியம் செய்தனர்.

இன்று அதே ஆயுதம் தங்களுக்கு நெருக்கமான, உயர்மட்ட அரச புலனாய்வு அதிகாரி ஒருவருக்கு எதிராக திருப்பப்படும் போது இந்த அரசியல்வாதிகள் காட்டும் எதிர்வினை வியப்புக்குரிய அரசியல் முரண்பாட்டை வெளிக்காட்டுகிறது. இவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கும் தவறிழைத்திருக்கக் கூடியவர்கள் என்று அடையாளம் காணப்படும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இன்னமும் வலுவான அரசியல் ஆதரவு இருக்கிறது என்ற செய்தியைக் கூறுவதற்கும் திட்டமிட்டுச் செய்யப்படும் நகர்வுகளாகும்.

சுருக்கமாகக் கூறுவதானால், இந்த அரசியல்வாதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகள் சாலேயின் நலன்கள் குறித்தவையோ அல்லது அவர் சம்பந்தப்பட்ட வழக்கின் சட்ட நுணுக்கங்கள் குறித்தவையோ அல்ல, மாறாக, தங்களின் அரசியல் நலன்களுக்கு உதவிய எவரோ ஒருவரைப் பாதுகாப்பதற்கான நோக்கத்தைக் கொண்டவை.

புலனாய்வுக் கட்டமைப்பு எவ்வாறு தன்னல அக்கறை கொண்ட அரசியல் சக்திகளுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தப்பட்டது என்பதை குற்றப் புலனாய்வு திணைக்களமும் நீதிமன்றமும் வெளிக் கொண்டுவரும் வேளையில், தங்களுக்கு ஆசான்களாக விளங்கியவர்களதும் தங்களதும் கடந்த கால செயற்பாடுகள் பரிசீலனைக்கு உட்படுவதை தடுப்பதற்கு. இவர்கள் ஒரு தற்காப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவ்வளவுதான்.

# அரைகுறையான போர்நிறுத்தம்



**நெதன்யாகுவுடனான கடுமையான வார்த்தைகள் அடங்கிய தொலைபேசி அழைப்பு உட்பட, ட்ரம்பின் உறுதியான இராஜதந்திர தலையீடு, அவர் இந்த இராஜதந்திர செயல் முறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதைக் காட்டுகிறது.**

இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான புதிய போர்நிறுத்த ஒப்பந்தம், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஈரானுடன் பூர்வாங்க ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முயற்சிகளுக்கு இருந்த ஒரு பெரிய தடையை நீக்க உதவக்கூடும்.

கடந்த வாரம், லெபனானில் இஸ்ரேல் தீவிரப்படுத்திய போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையை ஈரான் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம், இஸ்ரேல்-லெபனான் போர்நிறுத்தத்தை ட்ரம்ப் அறிவித்த போது, இஸ்ரேல் இனி அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்துவது "தடுக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறியிருந்தார். ஆனால் இஸ்ரேல் தொடர்ந்து வான்வழித் தாக்குதல்களை நடத்தியதோடு, தெற்கு லெபனானில் தரைவழித் தாக்குதல்களையும் விரிவுபடுத்தியது.

ஏப்ரல் 8 ஆம் திகதி அமெரிக்காவுடன் மேற்கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தில், லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் போர்நிறுத்தம் அமலுக்கு வரும் என்று வாஷிங்டன் உறுதியளித்ததாக ஈரான் வாதிட்டு வந்தது. இந்த நிலையில், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையை ஈரான் நிறுத்தியதைத் தொடர்ந்து, ட்ரம்ப் உடனடியாகச் செயலாற்றத் தொடங்கினார்.

பெய்ரூட் மீது குண்டுவீசும் திட்டத்தைக் கைவிடுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தாம் பேசிச் சம்மதிக்க வைத்ததாகவும், ஹெஸ்புல்லா பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அவர்கள் "சுடமாட்டோம்" என்று ஒப்புக்கொண்டதாகவும் அவர் கூறினார்.

ட்ரம்பின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்தே இஸ்ரேல்-லெபனான் போர்நிறுத்த அறிக்கை வெளியானது.

நெதன்யாகுவுடனான கடுமையான வார்த்தைகள் அடங்கிய தொலைபேசி அழைப்பு உட்பட, ட்ரம்பின் உறுதியான இராஜதந்திர தலையீடு, அவர் இந்த இராஜதந்திர செயல்முறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

லெபனான் நெருக்கடி தீவிரமடைவதற்கு முன்பு, அமெரிக்காவும் ஈரானும் ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கும், ஈரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்காவின் முற்றுகையை நீக்குவதற்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தன. இது ஈரானின் அணுசக்தி திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் வரவேற்கத்தக்கது என்றாலும், இது இன்னும் பலவீனமான [illegible]தாகவுமே உள்ளது. [illegible]கிய பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. லெபனானில் உண்மையான போர் இஸ்ரேலுக்கும் ஹெஸ்புல்லாவுக்கும் இடையே தான் நடக்கிறது.

லெபனான் அரசு இந்த மோதலில் ஒரு தரப்பு அல்ல, அதேபோல் ஹெஸ்புல்லா அமைப்பு லெபனான் இராணுவத்தின் கீழ் இயங்குவதும் இல்லை. ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஹெஸ்புல்லா ஒரு தரப்பாகச் சேர்க்கப்படவில்லை.

இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் ஹெஸ்புல்லா ஒருதலைப்பட்சமாகத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று கோருகிறது, ஆனால் இஸ்ரேல் எந்தவொரு சலுகையையும் வழங்க வேண்டும் என்று அது கேட்கவில்லை. தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேறினால் மட்டுமே தாம் போரை நிறுத்தப் போவதாக ஹெஸ்புல்லா கூறுகிறது.

2000-ஆம் ஆண்டுக்குப் பிறகு தெற்கு லெபனானுக்குள் தனது மிக ஆழமான ஊடுருவலை நிகழ்த்தியுள்ள இஸ்ரேலோ, படைகளைத் திரும்பப் பெறுவது குறித்த எந்தவொரு திட்டத்தையும் பற்றிப் பேசவில்லை. மேலும், இஸ்ரேல் சமீபத்திய ஆண்டுகளில் அனைத்து போர்நிறுத்த ஒப்பந்தங்களையும் மீறியுள்ளது.

ஒரு போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போதிலும், அது காசா மீது தொடர்ந்து குண்டுவீசி வருகிறது. ஏற்கனவே ஒரு போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்கும்போதே, ட்ரம்ப் ஒரு புதிய போர்நிறுத்தத்தை அறிவிப்பது, இந்த தற்காலிக அமைதியின் பலவீனத்தையே வெளிப்படுத்துகிறது.

ஈரானுடன் தான் திட்டமிட்டுள்ள ஒப்பந்தத்தை முன்னோக்கி நகர்த்துவதற்காக, லெபனானில் ஒரு தற்காலிக ஏற்பாட்டைக் கொண்டுவரவே அவர் முயற்சிக்கிறார். ஆனால் இது பலனளிக்க வேண்டுமானால், இஸ்ரேல் இந்த ஒப்பந்த விதிகளின் வரம்புகளை மீறாது என்பதற்கான உறுதியான வாக்குறுதிகளை அவர் பெற வேண்டும். லெபனானில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டுமானால், இஸ்ரேல் தெற்குப் பகுதியின் மீதான தனது சட்டவிரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவந்து, தனது படைகளைத் திரும்பப் பெற வேண்டும்.

(தி இந்து ஆசிரிய தலையங்கம், 6 ஜூன்2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுன் - 09 செவ்வாய்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 26
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : நவமி




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**இடபம்**
உணர்வுகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அந்தஸ்து உயரும் நாள்.

**மிதுனம்**
கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி இருக்கும்.

**சிம்மம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ், கவுரவம் உயரும். விசேஷங்களை முன்னின்று நடத்து வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும். வெளிவட்டாரத்தில் புதுஅனுபவம் உண்டாகும்.

**விருட்சிகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். அழகும் இளமையும் கூடும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப்பிடியுங்கள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உதவிக் கேட்டுதொந்தரவுதருவார்கள். உணர்ச்சிவசப்பட்டு பேசுவீர்கள். வாகனம் பழுதாகும்.

# வவுனியாவில் அரசியல் கருத்தரங்கு



கொழும்பு, ஜூன். 09

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் ஒழுங்கமைப்பில் பகிரங்க அரசியல் கருத்தரங்கு ஒன்று வவுனியாவில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் நி.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் மக்களின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் தேசிய இனங்களின் பிரச்னைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல், கட்சியின் மலையக பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன் மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி நுவான் போபகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களையும் கேள்விகளையும் முன்வைத்தனர். (அ)

# பெண்கள் பிரச்னை குறித்து உரையாடல் என அழைத்து மேடைப் பேச்சுடன் நிகழ்வை முடித்தமையால் சலசலப்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 09

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்ட மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்துகொண்டமல்லாகம் நிகழ்ச்சியில் பெண்ணொருவர் ஆக்கிரோஷமான கருத்துக்களை வெளியிட்டமையால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது.

பெண்கள் தொடர்பான கலந்துரையாடல் எனக் கூறி தம்மை அழைத்து விட்டு மேடைப் பேச்சுக்களுடன் நிகழ்வை முடித்துச் சென்றதாகவும் , அதனால் தான் கதைக்க வந்த பிரச்னை தொடர்பில் கதைக்க முடியவில்லை எனவும் பெண் ஒருவர் ஆக்கிரோஷமாக கருத்துக்களை தெரிவித்தார்.

இது தொடர்பில் உடனடியாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றதை அடுத்து குறித்த பெண்ணை, அமைச்சர் அழைத்து பிரச்னை தொடர்பில் கேட்டறிந்தார்.

இதன்போது குறித்த பெண், தான் சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், தான் வீட்டில் நாய்கள் காப்பகம் நடத்தி வருவதாகவும் , அதற்கான அனுமதிகளைத் திணைக்களங்கள் தரவில்லை. அத்துடன் தனது வீட்டுக்கு மலசல கூடம் அமைப்பதற்கான அனுமதியையும் தரவில்லை என முறையிட்டார்.

இதனை அடுத்து அமைச்சர், பிரதேச சபை உறுப்பினர்களை அழைத்து , பெண்ணின் முறைப்பாடுகள் மற்றும் குறைகள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறிச் சென்றார்.

இந்த சம்பவத்தால் நிகழ்வுக்கு வந்திருந்தவர்கள் மத்தியில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. (அ)

# எழுதுமட்டுவாழில் பெண்கள் சந்திப்பு அமைச்சர் சரோஜாவும் பங்கேற்றார்



யாழ்ப்பாணம், ஜூன். 09

வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் தொனிப் பொருளில் பெண்களாகிய நாம் ஒரே மூச்சுடன் செயற்படுவோம் எனும் எண்ணக்கருவில் பெண்கள் சந்திப்பு எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மற்றும் கடல் தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் பெண்கள் விவகார அமைச்சரால் பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக கொண்டுவரப்பட்ட விசேட நிவாரணம் மற்றும் கடன் வசதி பற்றி எடுத்துக் கூறப்பட்டதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் பெண்களின் சிறுவர்களை பாதுகாக்க அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட 10000 ரூபா திட்டம் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது.

அதனை தொடர்ந்து எழுதுமட்டுவாழ் பெண்களுக்கான பயிற்சி நிலையமும் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. (அ)

# நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் சுக்கிரவாரச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன். 09

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 56 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் ,

சிறப்புச் சொற் பொழிவினை சொற்பெரு வேந்தர் ச. நவநீதன் "மகாசாத்தாப் படலம் " என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட் டுப் பரிசில்கள் வழங்கப்பட வுள்ளன. (அ)

# அராலியில் திருமந்திரச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன். 09

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில்

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத், தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

திருமூல நாயனார்குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் பண்டிதர் திருவாசகப் பிரியன் த. மனோஜ்குமாரின் " சிவனே முழுமுதல் தெய்வம் " என்னும் சொற்பொழிவும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகக் கல்விமுறையொன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்நிற்கும்!



## பிரதமர் ஹரிணி கருத்து

கொழும்பு, ஜூன். 09

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் பொறுப்புக்கூறலுடன் அனைத்துப் பிள்ளைகளும் கல்வியின் தரத்தை சமமாக அனுபவிக்கக்கூடிய ஜனநாயகக் கல்வி முறையொன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்நிற்கும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கம் என்ற வகையில், அனைத்துப் பிள்ளைகளும் கல்வியின் தரத்தை சமமாக அனுபவிக்கக்கூடிய ஜனநாயகக் கல்வி முறையொன்றை ஏற்படுத்த வேண்டும்.

அதற்காகச் சரியான தரவுகள், கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பக் காரணிகளின் அடிப்படையில் தீர்மானங் களை எடுக்க வேண்டும்.எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரை டிஜிற்றல் மய மாக்கல் என்பது மிக முக்கிய மான ஒன்றாகும்.

மாறிவரும் உலகிற்கு ஏற்ப நாமும் மாறி முன்னோக்கிச் செல்ல வேண்டும். அத்துடன், அரச சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் வெளிப்படைத்தன்மையு டனும் மக்களுக்கு வழங்க டிஜிட்டல் மய மாக்கல் அவசி யம் என நாம் நம்புகிறோம்-என்றார். (அ)

# பெரும்போக நெற்செய்கைக்கு ட்ரோன் தொழில்நுட்ப வசதிகள்

கொழும்பு, ஜூன். 09

உலர் வலயத்தில் வரவிருக்கும் பெரும்போக நெற்செய்கை நடவடிக்கைகளுக்காக ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நெல் விதைப்பு மற்றும் உர விநியோகம் போன்ற முக்கிய விவசாயப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேனவின் தலைமையில், குருகுலவ பகுதியில் ட்ரோன் தொழில்நுட்பம் குறித்த விசேட பயிலரங்கொன்று அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, முற்றிலும் உள்நாட்டு கட்டுப்பாட்டு மென்பொருள் மற்றும் அமைப்புகளைக் கொண்டு, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விவசாய ட்ரோன் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டது.

அத்துடன், வரவிருக்கும் பெரும்போக பருவத்தில் இந்த நவீன தொழில்நுட்பத்தை விவசாய நடைமுறைகளில் எவ்வாறு வெற்றிகரமாக ஒருங்கிணைப்பது என்பது குறித்தான கலந்துரையாடல்களும் இந்த பயிலரங்கின்போது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மகா சங்கத்தினரின் வழிகாட்டல் நாட்டை கட்டியெழுப்ப அவசியம்

## சஜித் பிரேமதாஸ வேண்டுகோள்



கொழும்பு, ஜூன். 09

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் தற்போதைய சமூக,பொருளாதார சவால்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை 2027 மார்ச்சுடன் நிறைவடைகிறது. அதன் பின்னர், 2028 ஜனவரி முதல் இலங்கை 2.5 முதல் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டியிருக்கும்.

அப்போது கடனைச்செலுத்த முடியாமல் போனால் நாடு கடுமையான நெருக்கடிகளைச் சந்திக்கும் என்பதால், அதற்கான தகுந்த கொள்கை ரீதியான நடவடிக்கைகளை இப்போதிருந்தே எடுக்கவேண்டும்.

கடந்த கால நேரடி ஆக்கிரமிப்புகளைப் போலன்றி, இன்று பொருளாதார மற்றும் சமூக உறவுகள் ஊடாக மறைமுக ஏகாதிபத்திய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

உலகின் பல்வேறு தரப்பினருடன் இலங்கை மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களில் 90 வீதத்துக்கும் அதிகமானவை நாட்டின் இறையாண்மைக்கான நிபந்தனைகளை மீறியே நடக்கின்றன.

சமகாலத்தில் நமது நாடு ஆபத்தான பல சவால்களை முகம் கொடுத்து வருகின்றது. பல பிரச்னைகள் உருவாகி வரும் வேளையில், நாமொரு நாடாக நமது இருப்பு தொடர்பாக எடுத்துப் பார்க்கும்போது எண்ணமுடியாத பல அபாயங்களை நாடு எதிர்கொண்டு வருவதை புரிந்து கொள்ள முடியும்.

இந்த அபாயங்களை எதிர்கொள்ளும்போது நமக்குள் எந்த வேறுபாடுகள் முரண்பாடுகள் காணப்பட்டாலும், நாட்டுக்கு தகுந்த, நாட்டை பாதுகாக்கும், நாட்டை காக்கும் பொது கருத்தில், பொது வேலைத்திட்டத்தில் மற்றும் பொது நிலைப்பாட்டில் நாமனைவரும் ஒன்றாய் இருக்க வேண்டும்-என்றார். (அ)

# 14 மாவட்டங்களுக்கு டெங்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 09

நாட்டின் 14 மாவட்டங்களுக்கு டெங்கு நோய் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, நேற்று முதல் நாளை வரை விசேட டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் கபில கன்னங்கார தெரிவித்துள்ளார்.

அதிக ஆபத்துள்ள 72 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.அத்துடன், டெங்கு ஒழிப்புப் பணிகளுக்குத் இடையூறாக செயல்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை நாடு முழுவதும் 36 ஆயி ரத்து 168 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் மாத்திரம், இது வரை 20 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர் . (அ)




# 3 மாதம் விரதமிருந்து கதிர்காமம் வருகை தந்த ஜப்பானிய பக்தர்கள்!

கொழும்பு, ஜூன். 09

மூன்று மாத காலம் மாமிச உணவுகளைத் தவிர்த்து, கடுமையான விரதமிருந்து ஜப்பானில் இருந்து வருகை தந்துள்ள பௌத்த பக்தர்கள் குழுவொன்று வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புனித பூமியை வந்தடைந்து வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளது.

ஒன்பது பேரைக் கொண்ட இந்த ஜப்பானியப் பக்தர்கள் குழுவினர் கதிர்காமம் புனித பூமியில் தங்கியிருந்து, அங்குள்ள மக்களுக்குத் தான தர்மங்களை வழங்கியுள்ளதுடன் கதிர்காமக் கந்த பெருமானை வேண்டி விசேட வழிபாடுகளையும் முன்னெடுத்துள்ளனர்.

கதிர்காமக் கடவுளுக்காக இவர்கள்மூன்று நாள்கள்தொடர்ச்சியாகப் பூசைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது இந்த ஆன்மீகப் பயணம் குறித்து ஜப்பானியப் பெண் பக்தர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், தான் சுமார் 25 வருடங்களுக்கு முன்பே முதன்முறையாகக் கதிர்காமத்துக்கு வருகை தந்ததாகவும், கதிர்காமக் கந்த பெருமானுடன் தமக்குள்ள ஆன்மீகத் தொடர்பு காரணமாகவே அன்றிலிருந்து இன்றுவரை கதிர்காமத் தெய்வத்துக்காகத் தாம் இந்தத் தொடர் வழிபாடுகளையும் விரதங்களையும் மேற்கொண்டு வருவதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எரிபொருள், மின்சார கட்டண உயர்வு:

# தொழில்களை கைவிட்டு வெளிநாடு பயணிக்கும் உள்நாட்டு வர்த்தகர்கள்!

கொழும்பு, ஜூன். 09

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரக் கட்டணங்களின் உயர்வு காரணமாக உள்நாட்டு வர்த்தகர்கள் தங்களது தொழில்களை கைவிட்டு வெளிநாடுகளுக்கு செல்லும் கடுமையான சூழல் உருவாகியுள்ளதாக உள்நாட்டு தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அவ்வமைப்பின் செயலாளர் புஷ்பகுமார கருணாரத்ன தெரிவிக்கையில்-

எரிபொருள் நெருக்கடி காரணமாக சிறு அளவிலான உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருள்களை விநியோகிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தங்களுக்கு சொந்தமான சிறிய வாகனங்கள் மூலம் சந்தைப்படுத்தலில் ஈடுபடுவதால் எரிபொருள் விலை உயர்வு நேரடியாகவும் கடுமையாகவும் பாதித்துள்ளது. அதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை நுகர்வோர் மீது சுமத்த அவர்கள் விரும்பாவிட்டாலும் வேறு வழியின்றி தவித்து வருகின்றனர். தற்போதைய அரசாங்கம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறினாலும் உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் தொழிலாளர்களையும் பாதுகாத்தால் மட்டுமே நாட்டுக்கு வருமானத்தை பெற்றுத் தந்து நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியும் இந்த வளர்ச்சிப் பாதையை அரசாங்கம் முடக்கிவிடக்கூடாது.

மேலும் தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் எரிபொருள் விலை உயர்வு குறித்து பேசிய பல விடயங்கள் மக்களுக்கு இன்னும் நினைவிருக்கிறது. ஆனால் இன்று அரசாங்கம் அதனை மறந்துவிட்டது. அரசாங்கம் உடனடியாக வரிகளை குறைத்து மக்களுக்கு எரிபொருள் விலையில் நிவாரணம் வழங்கவேண்டும். வரிகளை நீக்கி உள்நாட்டு வர்த்தகர்களைப் பாதுகாக்க அரசாங்கம் முன்வர வேண்டும். இல்லையெனில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான உள்நாட்டு வர்த்தகர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறி தங்களது அறிவு மற்றும் திறன்களை வெளிநாடுகளுக்கு வழங்கி அங்கு அதிக வருமானம் ஈட்டத் தொடங்குவார்கள். இது நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய சவாலாக மாற முடியும்-என்றார். (அ)

# போதைப்பொருள் கடத்தல்காரரின் பிரதானமனா இலக்கு சிறுவர்களே!

## அமைச்சர் சந்தன அபேரத்ன எச்சரிக்கை



கொழும்பு, ஜூன். 09

நாட்டில் 11 வயது முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களே போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பிரதான இலக்காக மாறியுள்ளதாகப் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தின் பள்ளம பகுதியில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்காலச் சமூகத்தில் குடும்பக் கட்டமைப்பு ஒரு முக்கிய சமூக அலகாகப் பலவீனமடைந்து வருவதே இத்தகைய விபரீதங்களுக்கு முக்கிய காரணம்.

மேலும் பொதுமக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் நாட்டின் சாதாரண குடிமக்கள் என அனைத் துத் தரப்பினருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உள்ளது.

அத்துடன், நாட்டில் போதைப்பொ ருள் வர்த்தகத்தை முற்றிலுமாக ஒழிப்பதே அரசாங்கத்தின் இறுதி இலக்கு. நாட்டில் 11 வயது முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களே போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பிரதான இலக்காக மாறியுள்ளனர்-என்றார்.

# தைரியமுள்ள பெண் தொழில்முனைவோரை பாராட்டும் விழா அம்பாறை செயலகத்தில்!




அம்பாறை, ஜூன். 09

"வளமான நாட்டின் பெருமை அவளே, தேசத்தின் வழிகாட்டி" எனும் தொனிப் பொருளை முன்னிறுத்தி, 2026 சர்வதேச மகளிர் தினத்திற்கு இணைவாக, அம்பாறை மாவட்டத்தின் தைரியமிக்க பெண் தொழில்முனைவோரைப் பாராட்டும் விசேட விழா அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம் முழுவதும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு, உள்நாட்டுப் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பு வழங்கி வரும் பெண் தொழில்முனைவோர் பலர் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். பெண் தொழில்முனைவோரின் வணிக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை வழங்குதலும் இதன்போது இடம்பெற்றது.

அரசின் தலையீட்டுடன் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், அரசியல் அதிகாரத் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். அவர்களுள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரியந்த விஜேரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் முத்து ரத்வத்தே உட்பட பிரதேசத்தின் அரச அதிகாரிகளும், பல பெண் தொழில்முனைவோர் பயனாளிகளும் கலந்துகொண்டனர். (அ)

# தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர் உயிரிழப்பு பல்வேறு மட்டங்களில் தீவிர விசாரணை ஆரம்பம்

அம்பாறை, ஜூன். 09

குடும்ப பிரச்னை ஒன்றுக்காக கைது செய்யப்பட்டு பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் உள்ள சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்படும் சிறைக் கூடத்தில் நேற்று முன் தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

119 இலக்க முறைப்பாட்டிற்கமைய குடும்பப் பிரச்னை தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட குடும்பஸ்தர் சிறைக்கூடத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.

குடும்பஸ்தர் தான் அணிந்திருந்த சாரத் துண்டைப் பயன்படுத்தி தூக்கிலிட்டு உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை 65 வயது மதிக்கத்தக்க 6 பிள்ளைகளின் தந்தையான உயிரிழந்த குடும்பஸ்தரின் உறவினர்கள் சிலர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று தூக்கில் அவர் தொங்கி உயிரிழக்கவில்லை எனவும் உயிரிழந்தவரின் உடம் பில் காயங்கள் காணப்படுவ தாகவும் எனவே நீதி வேண்டும் எனவும் கோஷம் எழுப்பி இருந்தனர்.

மரணமடைந்த குடும்பஸ்தர் கடந்த 2 நாள்களுக்கு முன்னரும் குடும்ப பிரச்னைக்காக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அதே பிரச்னைக்காக அவர் மீண்டும் இரண்டாவது சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில வைத்திருந்த நிலையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் உயிரிழந்தவரின் சடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் மரண விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக் காக அம்பாறை பொது வைத்தி யசாலைக்கு எடுத்துச் செல்லப்ப டும் என பொலிஸ் உயர் அதி காரி தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த குடும்பஸ்தர் காரைதீவு 1 பிரிவு மாதவி வீதியைச் சேர்ந்த சாமித்தம்பி பாக்கியராசா ஆவார்.

இவர் முன்னாள் ஒய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# புலம்பெயர் தொழிலாளர் பண அனுப்பல் 3.9 பில்லியன் டொலர்களை விஞ்சியது!

கொழும்பு, ஜூன். 09

2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களின் மொத்த மதிப்பு 847 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2025 மே மாதத்தில் பெறப்பட்ட 641.7 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை ஒரு குறிப்பிடத்தக்க உயர்வாகும்.

இது ஆண்டுக்கு ஆண்டு 205.3 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான கால கட்டத்தில் பெறப்பட்ட மொத்த தொழிலாளர் பணப் பரிமாற்றங்கள் 3.90 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 26சூ என்ற குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது.

மேலும், இலங்கையின் அந்நியச் செலாவணி வரவுகளை வலுப்படுத்துவதில் வெளி நாட்டு வேலைவாய்ப்பு வருமானங்களின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, ஜூன். 09

மட்டக்களப்பு-வெல்லாவெளி பிரதேசத்தில் சட்டவிரோத உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை சுவராணையடி பிரதேசத்தில் வீடு ஒன்றை சுற்றிவளைத்து சோதனையிட்ட போது, அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த உள்நாட்டு துப்பாக்கி ஒன்றை கைப்பற்றி வீட்டின் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மாமனார் தாக்குதல் மருமகன் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன். 09

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்பெத்தாவ பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை மாமனாரின் தாக்குதலில் மருமகன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் மாமடல பகுதியைச் சேர்ந்த 26 வயது டையவரே உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறில் மருமகன் மீது மாமனார் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்த தாக்குதலில் காயமடைந்தே மருமகன் உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மாமனார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# எனது மகனை உயிருடன் என்னிடம் ஒப்படையுங்கள்!

கொழும்பு, ஜூன். 09

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சலேவை விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அவரது தாய் கோரிக்கையொன்றை விடுத் துள்ளார்.

"எனது மகனை உயிருடன் என்னிடம் ஒப்படையுங்கள். நாட்டுக்காகவே அவரை நான் ஒப்படைத்தேன்.

ஆனால் அரசியல் நோக்கங்களுக்காக அவரை பலி கொடுக்க எண்ணால்முடியாது" என அவர் கூறினார்.

இனி எந்தத் தாய்மாரும் தங்களது பிள்ளைகளை இராணுவ சேவைக்காக அர்ப்பணிக்கக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் தன்னைப் போலவே போராடவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி மனித...

மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

றுகுணு பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் அகழ்வுப்பணி மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அகழ்வின்போது தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட வைத் திய அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள் பங்கேற்றனர். (அ)

## ஈஸ்டர் தாக்குதல்...

ஞாயிறன்று திருப்பலியில் கலந்துகொள்வதற்காக தேவாலயங்களுக்குச் சென்ற மக்கள், அதேபோன்று சில ஹோட்டல்களில் தங்களது காலை உணவை உட்கொள்வதற்காகச் சென்ற மக்கள் என சுமார் 270 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அந்த மனிதர்கள் செய்த தவறு என்ன? இப்போது ஏழு வருடங்கள் ஆகின்றன.

இந்த மக்களின் துக்கத்தையும் வேதனையையும் பண இழப்பீடு வழங்குவதன் மூலம் மட்டுமே தணித்துவிட முடியாது என்பதை நாம் அறிவோம். இப்போது, வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இப்போது மற்றொரு கேள்வி எழுந்துள்ளது, இந்தத் தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில், அதாவது இந்த குண்டுதாரிகளுக்குப் பின்னால், இந்த குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால் ஒரு சதி இருந்தது என்பதாகும். அப்படியானால், அவர்களின் நோக்கம் என்னவாக இருந்தது? அவர்கள் யார்? எனவே, இது ஒரு அரசியல் சதியா? இதில் உள்ள உண்மை என்ன? இதற்குப் பின்னால் யார் இருந்தது? இதனைத் திட்டமிட்டவர்கள் யார்? இந்த தற்கொலை குண்டுதாரி கள் குழுவிற்கு இந்த குண்டுத் தாக்குதல்களை நடத்து வதற்கு உதவியாக இருந்த ஒரு குழு,இருந்ததா? என்பதை கண்டறிய வேண்டியது அவசியமாகும். அதனைக் கண்டறிவது, இதில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமையாகும்.

இந்த விசாரணைகள் சில காலம் நிறுத்தப்பட்டி ருந்து, தற்போது இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டு, செயல்படத் தொடங்கியதும், பல தரப்பினர் தற்றமடைந்துள்ளனர். விசாரணைகளை திசைதிருப்ப முயற்சி செய்கிறார்கள் என்றால், அது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்படும் ஒரு அநீதியாகும். இந்த மக்களின் கண்ணீருக்குச் செய்யப்படும் அநீதி, அவர்கள் சிந்திய இரத்தத்திற்குச் செய்யப்படும் அநீதி. எனவே, இந்த விசாரணைகளுக்கு எந்தவித தடையுமின்றி, எவ்விதத்திலும் நிறுத்தாமல் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை யாகும் - என்றார். (அ)

## கைதான பாடகரை...

வல்வெட்டித்துறையில் நேற்று திங்கள்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய கருத்துக்களைக் கொண்ட பாடலைப் பாடியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சங்கீர்த்தனன் எனும் சொல்லிசை பாடகர் தற்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில்,குறித்த பாடகரை விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தி வல்வெட்டித்துறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் அரசியல் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு, சங்கீர்த்தனனின் விடுதலையையும், பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இடம்பெறும் கைதுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

குறித்த போராட்டம் தொடர்பிலான அறிவித்தல்கள் வெளியான நிலையில் , நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை போராட்ட ஏற்பாட்டளர்கள் எனச் சிலரை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார், போராட்டத்தை கைவிட வேண்டும் எனவும், போராட்டம் முன்னெடுக்கப்பட்டால் , உங்களையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைப்போம் எனவும் அச்சுறுத்தி அவர்களிடம் வாக்கு மூலங்களை பெற்று விடுவித்து இருந்தனர்.

இந்நிலையில் பொலிஸாரின் நெருக்கடிகள், அச்சுறுத்தல்களையும் மீறி கலைஞனை விடுவிக்க வேண்டும் எனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## நான்காவது நாளாகவும்...

விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ஐந்து வருடங்களாக பணியாற்றம் தமக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னரே ஏனையோருக்கு வழங்கப்படவேண்டும் என கூறியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-05)

## சாலேயின் உடல்நிலை...

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேயைக் காண்பதற் குச் சென்றிருந்த அவர், அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

மனோரி சலே தொடர்ந்து தெரிவிக்கையில்-

என் கணவரை நான் சென்று பார்த்தேன். ஆனால், அருகில் செல்வதற்கு எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. அவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது. கடந்த இரண்டு நாள்களாக அவர் சாப்பிடவில்லை, ஒரு துளி தண்ணீர் கூட அருந்தவில்லை. இதனால் அவரது உடல் கடுமையான நீர் இழப்புக்கு உள்ளாகியிருக்க லாம். அவரது இரண்டு கைகளிலும் சேலைன் ஏற்றப்பட்டிருந்ததுடன், மேலும் சில மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இவ்வாறானதொரு நல்ல மனிதருக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதை கண்டு மிகவும் மனவேதனையடைகிறேன். வைத்தியர்கள் தற்போது அவருக்குத் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அவர் கடுமை யான மன உளைச்சலில் உள்ளதால், சிகிச்சைகள் அனைத் தையும் நிராகரித்து வந்தார்.

அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்கி, வைத்தியசாலைக்குக் கொண்டு சேர்க்குமாறு முன்னதாகக் கோரியிருந்தோம். அவரது உடல் நிலைமை மோசமடைந்து கொண்டே செல்கிறது. இன்று (நேற்று) காலையில்கூட அவரால் எழுந்து நிற்க முடியவில்லை .

எவ்வளவு எடுத்துக் கூறியும் தனது உண்ணாவிரப் போராட்டத்தைக் கைவிடுவதற்குச் சம்மதிக்கவில்லை. சாகும் வரை இந்த உண்ணாவிரதத்தைத் தொடர்வதிலேயே அவர் உறுதியாக உள்ளார். அதனால்தான், தனது கண்களைத் தானம் செய்வதற்கும், இறுதி உயிலை எழுதுவதற்கும் சட்டத்தரணியை உடனே வருமாறு அழைத்துள்ளார். தற்போது அவரது நிலைமை மிக மோசமாக உள்ளதாலேயே, அவருக்கு விசேட பாது காப்பு வழங்கப்பட்டுத் தனியாக வைக்கப்பட்டுள்ளார் -என்றார். (அ)

## சொல்லிசைப் பாடகர்...

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சங்கீத்ஷனை நேற்று நேரில் சென்று பார்வையிட்டு, நலம் விசாரித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சங்கீத்ஷனை நான் இன்று நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அவருடன் விரிவாகப் பேசியிருக்கின்றேன். இவரின் மறியல் விவகாரம் மற்றும் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு ஏற்கனவே எழுத்து மூலமான அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருக்கிறேன்.

நாளை(இன்று) முதல் நான்கு நாள்களுக்கு பாராளுமன்ற அமர்வுகள் நடக்கவுள்ளன. இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான நேரத்தையும் கோரியுள்ளோம். இந்தச் சந்திப்பின் போது, சங்கீத்ஷனின் விடுதலை குறித்து ஜனாதிபதியுடன் மிக முக்கியமாகப் பேசவுள்ளோம். பொதுமன்னிப்பின் அடிப்படையிலா வது அவரைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் நாங்கள் நேரடியாக வலியுறுத் துவோம்.

சங்கீத்ஷன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையால் சாதாரண நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் மூலம் அவருக்குப் பிணையைப் பெற்றுக்கொள்ள முடியாத சட்டச் சூழல் நிலவுகின்றது. அவர் பிணையில் வெளிவர வேண்டுமென்றால் கூட உயர்நீதிமன்றம் சென்றே அதற்கான வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும். இது மிகவும் காலதாமதத்தை ஏற்படுத்தும்.

ஆனால், நாட்டின் ஜனாதிபதிக்குரிய விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி, பொதுமன்னிப்பின் அடிப்படையில் அல்லது ஜனாதிபதியின் கருணையின் கீழ் சங்கீத்ஷனின் விடுதலை தொடர்பில் உடனடியாக இறுதி முடிவை மேற்கொள்ள முடியும். இதற்காகவே நான் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன். ஆகவே, அவரை விடுதலை செய்வதற்கான முழுமை யான சட்ட முயற்சிகளையும் தற்போதைய அரசு முன்னெடுத்து, அவரை உடனடியாக சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (அ)

## விடைபெறும் சுவிஸ்...

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றம் மற்றும் அதனால் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் தூதுவர் இதன் போது கேட்டறிந்து கொண்டார்.

இந்த விலையேற்றத்தின் காரணமாக, வடக்கு மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்ட பெருமளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமையை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி (மிதிவெடி) அகற்றும் செயற்பாடுகள் மற்றும் அதற்கான சுவிஸ் அரசாங்கத்தின் தொடர்ச்சியான பங்களிப்புத் தொடர்பிலும் இச்சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் இலங்கை [illegible] சுவிஸ் தூதுவரால் பாராட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், வடக்கு மாகாணத்தின் பொருளாதார முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்துறையின் தற்போதைய செயற்பாடுகள், சந்தையில் பொருட்களின் விலைத்தளம்பல் மற்றும் அதனால் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், சிக்கல்கள் தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன், வடக்கு மாகாணத்தின் தற்போதைய பொதுவான நிலைமைகள் குறித்தும் சுவிஸ் தூதுவர் கௌரவ ஆளுநருடன் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலனும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உயர்தரப் பரீட்சை...

அறிக்கையொன்றில், இப்பரீட்சை செப்ரெம்பர் மாதம் 05ஆம் திகதி வரை நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணையும் பரீட்சைத் திணைக்களத்தினால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, 2026 ஆம் ஆண்டுக்கான 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 09ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

## எத்தியோப்பியாவில்...

நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்த மூன்று நபர்களும், சட்டவிரோதமாக கனடாவை அடைய முயன்றபோது எத்தியோப்பியா வழியாகப் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது. எத்தியோப்பியாவில் உள்ள குற்றக் கும்பல் தங்களைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருப் பதாகவும், விடுதலைக்காகப் பிணைத்தொகை கோருவ தாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உறவினர்களிடம் தெரிவித்தனர்.

இதற்கிடையில், இந்தச் சட்டவிரோதப் பயண நடவடிக்கைக்கு உதவியதாகக் கூறப்படும் சந்தேக நபர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இவர்களின் மீட்பு தொடர்பில் பீல்ட் போஸ்ட் செய்திச் சேவை கூறியுள்ளதாவது-

பாதிக்கப்பட்டவர்கள் கடத்தப்படுவதற்கு முன்ன தாக வேலை வாய்ப்புகளுக்காக எத்தியோப்பியாவுக்கு வருகை தந்துள்ளனர். மூன்று நபர்கள் காணாமல் போனது குறித்து இலங்கைத் தூதரகம், எத்தியோப்பிய பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டதைத் தொடர் ந்து மே 26 அன்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள், மூன்று நாள்களுக்கு முன்பு மே 23 அன்றுதான் நாட்டுக்கு வந்திருந்தனர்.

இந்தத் தகவலைத் தொடர்ந்து, காணாமல் போன வெளிநாட்டுப் பிரஜைகளைக் கண்டுபிடிப்பதற்காக சட்ட அமுலாக்க முகமைகள் உடனடியாகத் தேடுதல் வேட்டையைத் தொடங்கின.

மேம்பட்ட டிஜிற்றல் கண்காணிப்பு மற்றும் உளவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்டவர்கள் கோட் 2 உரிமத் தகடு கொண்ட சுசுகி வாகனத்தில் விமான நிலையத்திலிருந்து நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டதை பொலிஸ் புலனாய்வாளர்கள் கண்டுபிடித்தனர். நகரப் பாதுகாப்புப் படையினரிடம் உடனடியாகப் பிடிபடாமல் இருப்பதற்காக, சந்தேக நபர்கள் பாதிக்கப் பட்டவர்களைத் தலைநகரிலிருந்து ஒரு தொலைதூர இடத்திற்குக் கொண்டு சென்றனர்.

ஓரோமியா பிராந்தியத்தில் அமைந்துள்ள ஷஷெமெனே நகரில், ஒரு குடியிருப்பு வீட்டுக்குள் பூட்டப்பட்டிருந்த பாதிக்கப்பட்டவர்களை ஒரு ஒருங்கிணைந்த சோதனை வெற்றிகரமாகக் கண்டுபிடித்தது. பாதுகாப்புப் படையினர், பணயக்கைதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல், சம்பவ இடத்திலேயே ஆறு சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

கடத்தல்காரர்கள் அவர்களை விடுவிப்பதற்காக ஒவ்வொரு நபருக்கும் தலா 30,000 டொலர்கள் (மொத் தம் 90,000டொலர்கள்) கோரியதாகக் கூறப்படுகிறது-என்று தெரிவித்துள்ளது. (அ)

## மகாஜனா பெண்கள்...

அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தேசிய மட்டத்தில் சாம்பியனாகியுள்ளது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் குருநாகல் மலியதேவ பெண்கள் மகளிர் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜனா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தேசியமட்ட சாம்பியனாகியுள்ளது.

போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல்கள் எவையும் போடவில்லை. இரண்டாம் பாதியில் மகாஜனா கல்லூரி பெண்கள் அணி இரண்டு கோல்களை போட்டு இந்த தொடரின் சம்பியன் ஆகியது.

இப்போட்டியில் இரண்டாம் பாதியில் மகாஜனா கல்லூரி வீராங்கனை ஜே.கல்கிசா முதல் கோலையும், அடுத்த கோலை ஆன் ரிவிஸ்சனாவும் போட்டனர்.

இத்தொடரின் சிறந்த வீராங்கனையாக மகாஜனா கல்லூரியை சேர்ந்த ஆன் ரிவிஸ்சனாவும் சிறந்த கோல் காப்பாளராக மகாஜனா கல்லூரியை சேர்ந்த சாளினியும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

ஈழநாடு

# சுரேஷ் சாலேயுக்கு நீதி கேட்டு கொழும்பில் நேற்று போராட்டம்

## கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடந்தது




கொழும்பு, ஜூன். 09

பயங்கராவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை பாதுகாப்பதற்காக நேற்று திங்கள்கிழமை காலை 10 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் விடுதலை புலிகள் கொலை செய்தது படுகொலை இல்லையா போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர்.

அத்தோடு, நாட்டுக்காக போராடிய சுரேஷ் சாலேயை சிறைப்படுத்தி ஜனாதிபதி உட்பட சானி அபேசேகர ஆகியோர் பயங்கரவாதியை போன்று செயற்படுகிறார்கள் என பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

இந்த போராட்டத்தில் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உட்பட அரசியல் தரப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ)

# கடல் கொந்தளிப்பு; சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 09

நாட்டைச் சூழவுள்ள ஆழ்கடல் மற்றும் கரையோரக் கடற்பரப்புகளில் நிலவி வரும் தீவிரக் கொந்தளிப்பான வானிலையினால், வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று திங்கள்கிழமை வெளியிடப்பட்டுள்ள இந்த விசேட அனர்த்த ஆலோசனை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணி வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாகக் கற்பிட்டி வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். இப்பகுதிகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் வீசக்கூடும். இதனால், கடலில் பயணம் செய்வோரும் மற்றும் மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரும் வரை மேற்படி கடற்பரப் புகளில் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்ந் துகொள்ளுமாறு மிக அவசரமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாகக் காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளும், கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். இப்பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந் தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையான கடற்பரப் புகளில் கடல் அலைகள் சுமார் 2.0 மீட்டர் முதல் 2.5 மீட் டர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. எனவே, இந்த விசேட அனர்த்த நிலைமை குறித்துக் கரையோரப் பகுதி மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# செம்பியன்பற்று மீனவர்களின் தீவிர முயற்சியால் கடலில் காணாமற்போன மீனவர் உயிருடன் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 09

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் கடலுக்குச் சென்று காணாமல்போன மீனவர் ஒருவர், சக மீனவர்கள் மற்றும் கடற்படையினரின் தீவிர தேடுதல் வேட்டையின் மூலம் சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

செம்பியன்பற்று வடக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் நேற்று (ஜூன்-7) இரவு வழமை போல் கடற்தொழிலுக்குச் சென்றுள்ளார். எனினும், நீண்ட நேரமாகியும் அவர் கரை திரும்பாததால் குடும்பத்தினரிடையே அச்சமும், அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழ்நிலையும் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, செம்பியன்பற்று வடக்கு சென். பிலிப்நேரிஸ் கடற்தொழிலாளர் சங்கத்தினர் உடனடியாக களத்தில் இறங்கி தேடுதல் பணிகளை ஆரம்பித்தனர். இத் தேடுதல் முயற்சிக்கு கடற்படையினரும் தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர்.

பல மணித்தியாலங்கள் நடுக்கடலில் முன்னெடுக்கப்பட்ட தீவிர தேடுதலின் பயனாக, கரைப் பகுதியில் இருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் தத்தளித்துக் கொண்டிருந்த குறித்த மீனவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டார். (அ)

# வாகன இறக்குமதியில் வீழ்ச்சி ஏற்படவில்லை

கொழும்பு, ஜூன். 09

இந்த ஆண்டின் தொடக்கத்தில் வாகன இறக்குமதிக்கு மேலதிக கட்டணம் விதிக்கப்பட்ட போதிலும், வாகன இறக்குமதிகளில் வீழ்ச்சி ஏற்படவில்லை என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சந்தனா புஞ்சிஹேவா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்ந்து நாட்டுக்குள் வருவதாகவும், சந்தையில் விற்பனையாகாமல் பல வாகனங்கள் தேங்கியிருந்தாலும் இறக்குமதியில் எதிர்பார்த்தளவு குறைவு பதிவாகவில்லை என்றும் குறிப்பிட்டார். (அ)

# 6,00,000 போலி அமெ. டொலருடன் கொழும்பில் நான்கு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜூன். 09

கொழும்பில் 6,00,000 போலி அமெரிக்க டொலர் நோட்டுகளை வைத்திருந்த நால்வர் மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் வைத்து மத்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இதன்போது அவர்களிடம் இருந்து 600,000 அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் கைதானவர்களில் பெண் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் இடமளிக்கப் போவதில்லை!

## விமல் வீரவன்ஸ கொந்தளிப்பு

கொழும்பு, ஜூன். 09

சுரேஷ் சலேவை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து, முள்ளிவாய்க்கால் பழிவாங்கலை நிறைவேற்றவே அரசாங்கம் முயற்சிக்கிறது. புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் இடமளிக்க போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பயங்கராவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள உளவுத்துறையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலேயை பாதுகாப்பதற்காக நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுரேஷ் சாலேயை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து, முள்ளிவாய்க்கால் பழிவாங்கலை நிறைவேற்றவே அரசாங்கம் முயற்சிக்கிறது. புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. சுரேஸ் சாலேயுக்காக தொடர் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபடுவோம்- என்றார். (அ)

# சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு அமைய மகாணசபை தேர்தலை விரைந்து நடத்துக!

## ரெலோ அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 09

மாகாண சபை தேர்தல்களுக்கு தடங்கலாக இருக்கும் சட்ட சிக்கல்களை தாண்டுவதற்கு பாராளுமன்றத் தெரிவு குழுவிற்கு முன்வைக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசு தேர்தல்களை விரைந்து நடத்த வேண்டும் என ரெலோ அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ரெலோ பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

சட்டமா அதிபரினாலேயே பரிந்துரைக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாகாண சபை தேர்தல்கள் திருத்தச் சட்டத்தை இரத்து செய்து 1988 சட்டத்தின் கீழ் இருந்த முந்தைய தேர்தல் முறைக்கு திரும்புதல் மூலம் மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்த வழி செய்து உள்ளது.

இருப்பினும் அந்த பரிந்துரையை கருத்தில் கொள்ளாது அரசரப்பு புதிய திருத்தச் சட்டம் ஒன்றை கொண்டு வரவேண்டும் என்றும் அதில் பெண்களுக்கு இளைஞர்களுக்கும் அதிக ஒதுக்கீடுகளை செய்வது பற்றிய புதிய திருத்தச் சட்டத்தை எப்படி கொண்டு வருவது என்பது ஆலோசிக்கவேண்டும் என்று கூறுவது காலத்தை வீணடிக்கும் செயல்பாடாகும்.

ஏற்கனவே தமிழர்கள் தரப்பு கூறி வருகின்ற பழைய தேர்தல் முறையின் மூலம் தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக சட்ட அதிபர் திணைக்களமும் பரிந்துரை செய்துள்ளது. இதைக் கருத்தில் கொள்ளாது அவர்கள் பரிந்துரை செய்த மற்ற விடயங்களை அரசு கவனத்தில் எடுப்பது என்பது மாகாண சபை தேர்தல்களை பின் போடுவதற்கு முயற்சி செய்வதாகவே அமையும்.

சட்டமா அதிபரினால் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகளில் ஒன்று - 2017-ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டம், எண் 17-ஐ ரத்து செய்து, 1988 சட்டத்தின் கீழ் இருந்த முந்தைய தேர்தல் முறைக்குத் திரும்புதல் 2017 ஆம் ஆண்டு திருத்தம் இருந்தபோதிலும், முந்தைய தேர்தல் சட்டத்தை மீண்டும் வருங்கால அடிப்படையில் நடைமுறைக்குக் கொண்டுவருதல்

மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 3 ஏ(14)-இன் கீழ், (தொகுதி வரையறை) எல்லைகள் மீள்நிர்ணய குழு தனது அறிக்கையைத் தேவையான காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தவறியதால், தற்போதுள்ள 2017 திருத்தத்தை இப்போது முழுமையாகச் செயல்படுத்த முடியாது என்று சட்டமா அதிபர் கூறிய விடயம் ஏற்கனவே தெரிந்ததே. அதனாலே அதை ரத்து செய்து பழைய முறைக்கு செல்வதன் மூலம் மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்த முடியும் - என்றுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media